2021-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 27–ம் தேதி புதன்கிழமை மாலை 5,00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மை நகல்,

முன்னிலை:– திரு.கு.ராஜேந்திரன்,எம்.இ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி

1, ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த வேண்டி பைப்லைன்கள் பதிக்கவும், வீட்டிணைப்புகள் வழங்கவும் சாலைகள் வெட்டப்பட்டதால் நகரில் உள்ள பெரும்பாலான சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் ஏற்றதாக இல்லாமல் உள்ளது. எனவே, 2021–2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் (TURIP), கீழ் குறிப்பிட்டுள்ள பழுதடைந்துள்ள சாலைகளை மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலைப்பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து உரிய நிர்வாக அனுமதி வேண்டி திட்டப்பிரேரணை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் | சாலை நீளம் (மீட்டரில்) | சாலை அகலம் (மீட்டரில்) | மதிப்பீடு தொகை (ரூ,இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | மளிகை தோப்பு ரோடில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 460.00 | 4.20 | 31.00 |
| 2 | 5 | ராஜா தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 144,80 | 5.50 | 19.00 |
| 3 | 5 | எல்லையம்மன் கோவில் 1–வது தெருவில் (அருந்ததியர் காலனி) மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 266,60 | 5.50 | 34.00 |
| 4 | 8 | தார்வழி 1–வது தெருவில் (உரகிடங்கு பகுதி) மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 700,00 | 4,50 | 56,50 |
| 5 | 13 | கஸ்பா,பி மெயின் ரோடில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 293,10 | 5.50 | 28,00 |
| 6 | 14 | கஸ்பா.அ.மெயின் ரோடில் ( கந்தபொடிகார தெரு) மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 384,60 | 5.00 | 36,00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 17 | ஈத்கா ரோடில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 207,60 | 4.20 | 14.50 |
| 8 | 17 | நாகேஸ்வரன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 239,30 | 5.50 | 21.00 |
| 9 | 20 | சுண்ணாம்புகார தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 401.10 | 6,00 | 40.00 |
| 10 | 22 | இ.எஸ்,ஐ.மருத்துவமனை தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 238,70 | 4.50 | 28.00 |
| 11 | 22 | காதர்பேட்டை மெயின் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 267,50 | 5,50 | 24,00 |
| 12 | 23 | வி.ஏ.கரீம் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 500,80 | 4.50 | 56.00 |
| 13 | 28 | ஆசனாம்பட்டு ரோடு கம்பிக்கொல்லை தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 1352.70 | 6.50 | 194.00 |
| 14 | 32 | மந்தகரை (மாதகடுப்பு) மெயின் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 604,00 | 5.00 | 69,00 |
| | | மொத்தம் | | | 651.00 |

**அலுவலக குறிப்பு : 1.**மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

2.தார் சாலை பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீடு தொகை ரூ.651.00 இலட்சத்தினை முழுமான்யமாக பெற மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

3.தார் சாலை பணிகளுக்கான நிர்வாக அனுமதியை நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் பெறவும் உரிய முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்(இ1/1323/2021)

**தீமான எண்.164:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

2, திருவத்திபுரம் நகராட்சியில் பொறியியல் பிவில் இரவு காவலராக பணிபுரிந்து வரும் திரு.சி. அஜீத் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக ஆம்பூர் நகராட்சியில் பொறியியல் பிரிவில் காலியாக உள்ள இரவு காவலர் பணியிடத்திற்கு பணி மாறுதல் கோரி தனியர் மனுவினை நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களது 11,08.2021ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட பணியாளரை ஆம்பூர் நகராட்சியில்பொறியியல் பிரிவில் காலியாக உள்ள இரவு காவலர் பணியிடத்திற்கு பணியிடை மாற்றம் செய்து கொள்ள நகரமன்ற தீர்மானம் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே திருவத்திபுரம் நகராட்சியில் இரவு காவலராக பணிபுரிந்து வரும் திரு.சி.அஜீத் என்பவரை ஆம்பூர் நகராட்சி பொறியியல் பிரிவில் காலியாக உள்ள இரவு காவலர் பணியிடத்திற்கு பணிமாற்றம் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1222/2021/சி1
**தீமான எண்.165:– அனுமதிக்கப்பட்டது**

3, நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தலுக்கான பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.60.00 லட்சத்திற்கு (ரூபாய் அறுபது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.
ந,க,எண்.406/2021/சி3
**தீமான எண்.166:– அனுமதிக்கப்பட்டது**

ஓம்/.கு.ராஜேந்திரன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி